**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**
**CC.No. 07/2020**

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் நாள் வெள்ளி கிழமை அரசு தரப்பு சாட்சி–01, திருமதி.கவிதா என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு/கோவிந்தராஜ். மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.கவிதா | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | திருஞானம் | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | PW1 |
| வட்டம் | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |

**( எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் அணைக்குடம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 24.06.2019ம் வருடம் காலை 07.30 மணியளவில், நான் என் வீட்டு மாட்டுக்கொட்டகையில் மாடுகளை அவிழ்த்து கட்டிக்கொண்டிருந்தேன். அப்போது ராஜேந்திரன் ஆர்.எஸ்.பதி எறிந்ததற்கு, என்னை ஏன் பேசுகிறாய் என் திட்டி, தேவிடியா மகளே, குச்சிகாரி மகளே என்று திட்டினார். கையில் இருந்த கட்டை கழியால் என் நெற்றி, தலையில் அடித்துவிட்டார். அப்போது என் கணவர் வந்து தடுத்தபோது, அவருக்கும் காலில் அடிபட்டது. அவரை கட்டையால் அடித்தார். எனக்கு இரத்தம் வந்ததும் எனக்கு மயக்கம் வந்தது. நான் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்லியதுதான். **( புகார் வாக்குமூலம் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை சம்பவத்தன்றே விசாரணை செய்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. தஞ்சாவூரில் வந்து விசாரித்தார்கள்.சம்பவம் நடந்த அன்று ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு 08.00 மணிக்கு

வந்துவிட்டேனா என்றால் 07.30 மணிக்கு வந்துவிட்டேன். நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் மருத்துவரிடமும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் என்னை 5 நபர் அடித்ததாக சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு 09.30 மணிக்கு சென்றிருந்தேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு பக்கத்தில் அருகில் உள்ள எதிரியின் வீட்டிற்கு அருகில்தான் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல என்றால் சரிதான். எதிரி என் தலையில் அடித்து காயம்பட்டதாகத்தான் மருத்துவரிடம் சொல்லியுள்ளேன் என்றும், இன்று வழக்கிற்காக புதிதாக எதிரி நெற்றியில் அடித்ததாக சொன்னது சரியல்ல என்றால் சரிதான். நான் எதிரி அடித்ததால் மயக்கம் போட்டு கீழே விழுந்ததாக சொல்வது வழக்கிற்காக சொல்வது என்றால்சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் எதிரிக்கு வீடு எதுவும் இல்லை என்றும், அவ்வாறு எதிரிக்கு வீடு இருந்திருந்தால் அதனை போலீசார் தங்கள் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டிருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் அப்பாவும், எனது கணவரின் அப்பாவும் உடன்பிறந்த அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். எதிரி குடும்பத்திற்கும் என் குடும்பத்திற்கும் சொத்து பாகம் பிரித்துக்கொண்டது சம்மந்தமாக முன் விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். எதிரி குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் பாகப்பிரிவினை எழுத்து பூர்வமாக செய்துள்ளார்கள். ஆனால் பதிவு செய்யவில்லை. எங்களுக்கு பாகமாக உள்ள சில சொத்துக்களுக்கு எதிரியின் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். எனது கணவருக்கு பாகமாக கிடைத்த சொத்தில் ஒரு சொத்தை சிவசங்கர் என்பவருக்கு கிரையமாக கொடுத்துள்ளோம் என்றால் அது எனது கணவருக்குத்தான் தெரியும். ஆனால், எங்களது சொத்தில் ஒரு சொத்தை சிவசங்கர் என்பவர் அனுபவம் செய்து வருகிறார். அதனை போக்கியத்திற்கு அனுபவிக்கிறாரா அல்லது கிரயமாக வாங்கி அனுபவிக்கிறாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொத்து சம்மந்தமாக எனது குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் அடிக்கடி சண்டை வருவது வழக்கம் என்றால் சரிதான். எதிரிக்கு சொந்தமான சில சொத்துக்களுக்கு எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான சொத்துக்கள் வழியாகத்தான் பாதை செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. குடும்ப சொத்து என்பதால் எங்கள் சொத்து வழியாகத்தான் எதிரி சொத்திற்கு பாதை உண்டு என்றும், அந்த பாதை வழியாக நடக்கக்கூடாது என்று நான் அடிக்கடி தகராறு செய்வேன் என்று சொன்னால்சரியல்ல.

எனது சொத்து வழியாக எதிரிக்கு சொந்தமான சொத்திற்கு எதிரி செல்லும்போது, நான் தடுத்து அந்த சொத்தை எனக்கு கிரையம் கேட்டேன் என்றும், அதனை எதிரி கொடுக்க மறுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எதிரியிடம் கிரயம் கேட்டுக்கொண்டிருக்கிறோம், எதிரி கொடுக்க மறுத்துவிட்டார். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியால் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரி என்னை கட்டைக் கழியாலும், ஆர்.எஸ்.பதி கழியாலும் அடிக்கவில்லை என்றும், அதனால் எனக்கு தலையில் எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியால் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்பதால்தான், போலீசாரிடம் ஒரு மாதிரியாகவும், மருத்துவரிடம் ஒரு மாதிரியாகவும், முதல் விசாரணையில் ஒரு மாதிரியாகவும் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால்ச ரியல்ல. நான் மயக்கம் போட்டபோது, 108 ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு கூட்டிவந்தார்கள் என்றால் நான் வண்டியில்தான் வந்தேன். உண்மையில் நான்மயக்கம் போட்டிருந்தால், என்னை இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்திருக்க முடியாது என்றால் நான் இருசக்கர வாகனத்தின் நடுவில் உட்கார்ந்திருந்தேன். பின்னால் ஒருவர் பிடித்து வந்தார். நான் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு வரவும் இல்லை என்றும், என்னை யாரும் பின்னால் உட்கார்ந்து பிடித்துக்கொள்ளவில்லை என்றும், நான் இருசக்கர வாகனத்தில் வந்திருந்தால், என்னை பிடித்துக்கொண்டு வந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மாட்டை அவிழ்க்கும்போது, மாடு தண்ணீர் குடிக்க தொட்டிக்கு வேகமாக இழுத்தபோது, அதனால் நான் நிலைதடுமாறி கீழே விழுந்து, மாட்டுக்கொட்டகையில் உள்ள கொட்டகை காலிலும், முளைக்குச்சியிலும் அடிபட்டதனால்தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றும், எதிரி அடித்து எந்த காயமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாட்டால் எனக்கு ஏற்பட்ட காயத்தை, எனக்கு சாதகமாக எடுத்துக்கொண்டு, எதிரிக்கும் எனக்கும் உள்ள சொத்து பிரச்சனையை தீர்த்துக்கொள்ளலாம் என்று எதிரியின் மீது பொய்யாக போலீசில் புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்சரியல்ல. போலீசார் என்னை தஞ்சாவூரில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. போன் மூலமாக விசாரித்தார்கள். போன் மூலமாக போலீசார் விசாரித்தார்கள் என்று சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்று சொன்னால்சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/—இரா.இராஜசேகரன்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.